


புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், தச்சங்குறிச்சியில், ஜல்லிக்கட்டுப் போட்டியினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 03.01.2026 அன்று கொடியசைத்து துவக்கி வைத்து, ஜல்லிக்கட்டு உறுதிமொழியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் வாசிக்க, அதனை பின் தொடர்ந்து, அனைத்து மாடுபிடி வீரர்களும் ஏற்றுக்கொண்டனர். உடன், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம். சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, எம். பரமசிவம், மா.தமிழ் அய்யா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



தர்மபுரி மேற்கு மாவட்டம், பாலக்கோடு மேற்கு ஒன்றியத்தில் நடைபெற்ற "என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி" செயல்திட்ட கூட்டத்தில் தர்மபுரி மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன் கழக அரசின் சாதனைகளை விளக்கி பேசினார்.உடன் பாலக்கோடு மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் பி.கே.அன்பழகன்,மூத்த வழக்கறிஞர்.டி.சந்திரசேகர், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள், ஒன்றிய கழக நிர்வாகிகள்,BLA2, BDA நிர்வாகிகள்,கிளைக்கழகச் செயலாளர்கள்,இளைஞர் அணியினர் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### உதகையில் ஓய்வூதிய திட்டத்தை அறிவித்த

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு அரசு ஊழியர்கள் நன்றி!

## கொறடா கா.ராமச்சந்திரன் முன்னிலையில் இனிப்பு வழங்கி கொண்டாடினர்!

உதகை, ஜன. 6 -

கோத்தகிரியில் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை அறிவித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அரசு ஊழியர்கள் மன மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்தனர்!

அரசு ஊழியர்களின் 23ஆண்டுகால கோரிக்கையை இன்று தமிழ்நாடு முழுவதும் நிறைவேற்றிய தொழிலாளர்களின் பாதுகாவலர் முதல்வர் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் துணை முதல்வர் அவர்களுக்கும் மற்றும் திராவிட மாடல் ஆட்சியின் சாதனையை போற்றும் வகையில்,



கோத்தகிரி பகுதியில் தமிழ்நாடு அரசு கொறடா கா.ராமசந்திரன் மற்றும் நீலகிரி மாவட்டப் பொறுப்பாளர் கே எம்.ராஜு ஆகியோர் முன்னிலையில் தொ.மு.ச. பேரவை நிர்வாகிகள் சார்பாகவும் மற்றும் தொழிலாளர் உடன்பிறப்புகள் சார்பாக பட்டாசு வெடித்து நன்றியினை தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் தொழிலார் அணி மாவட்ட தலைவர் Y.முருகன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் இ.ராம் குமார், LPF மண்டல தலைவர் ஸ்டீபன், LPF கிளை உறுப்பினர்கள், கோத்தகிரி ஒன்றிய துணை செயலாளர்கள் கணபதி.,செல்வம், தினேஷ் LPF, மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் தமிழ், தொண்டரணி மணி, .கீழ் கோத்தகிரி ஒன்றிய செயலாளர் பீமன், ஒன்றிய செயலாவீரர் SS.குமார், .மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் விக்னேஸ்வரன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் அசார். ,மாவட்ட பிரிதிநிதிகள் வின்சென்ட், ராமகோபால், ஆதிதிராவிடர் ஒன்றிய அமைப்பாளர் சிவசங்கரன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சிவனேஷ், .ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் மகி, கழக உடன்பிறப்புகள் அரசு ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### வெல்லும் தமிழ்ப் பெண்கள்


# டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு குறித்த ஆலோசனைக் கூட்டம்!

## தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் அறிக்கை!

தஞ்சை ஜன. 6 -

வெல்லும் தமிழ் பெண்கள் டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு தொடர்பாக ஆலோசனை கூட்டம் தஞ்சை வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு வெல்லும் தமிழ் பெண்கள் டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு நடைபெறுவதையொட்டி நாளை (07.01. 2026 - புதன்கிழமை) காலை 10.00 மணிக்கு கும்பகோணம் அன்பு மஹாலில், மாவட்ட கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ தலைமையில், மாண்புமிகு உயர் கல்விதுறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், கழக சட்டதிட்ட திருத்தக் குழு தலைவர் . சு.கல்யாணசுந்தரம் எம்.பி, முன்னாள் எம்.பி செ. இராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் தஞ்சை வடக்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.



அதுசமயம் கூட்டத்தில் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட மாநகர ஒன்றியபகுதிபேரூர் மகளிர் அணி/ மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அய்யா ப.தமிழரசன்
### சனவரி 6 (2007)



தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

மன்னார்குடி நகரக் கழகக் செயலாளராக பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

விவசாயிகள் உரிமை காத்திட தலைமைக் கழகம் அறிவித்த போராட்டத்தில் கலந்து கொண்டு அ.தி.மு.க. அரசின் காவல் துறை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நெஞ்சில் குண்டடிப்பட்டு உயிர் மீண்டவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் “அஞ்சாநெஞ்சன்” என்று பாராட்டப் பட்டவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### ஈரோடு தெற்கு மாவட்டம் முழுவதும்

# திராவிடப் பொங்கல் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!

ஈரோடு, ஜன. 6 –

ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி அறிக்கை வருமாறு:

கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி திராவிட பொங்கல் சமூக நீதிக்கான கொண்டாட்டமாக, தமிழர் திருவிழாவான தைப் பொங்கலையொட்டி பல்வேறு போட்டிகள் நடத்தி பரிசு பொருட்கள் வழங்கிட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஜனவரி 6ஆம் தேதி முதல் ஜனவரி 17ஆம் தேதி வரை ஈரோடு தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து ஒன்றியங்கள் மற்றும் பகுதிகளில் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பெண்கள் குழந்தைகளுக்கான கோலப் போட்டி உள்ளிட்ட சிறு சிறு போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட உள்ளது. அதைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடத்தி திரை அமைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் சிறப்பு செய்தியுடன் கூடிய திரை திருவிழாவை நடத்த வுள்ளோம்.ஈரோடு தெற்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றியம் மற்றும் பகுதிகளில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி விளையாட்டு போட்டிகளை ஏற்பாடு செய்து நடத்தவுள்ளோம் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

6.1. 2026 சூரம்பட்டி பகுதி சார்பில் சோலார் யங் இண்டியா SMDயில் ஆண்களுகாண கிரிக்கெட் போட்டி

6.1. 2026 கொல்லம்பாளையம் பகுதி சார்பில் வில்லரசம்பட்டி, ஸ்போர்ட்ஸ்வில்லேஜ்ஜில்கோகோ

7.1. 2026 சூரியம்பாளை யம் பகுதி சார்பில் வில்லரசம்பட்டி ஸ்போர்ட்ஸ் வில்லேஜ்ஜில் ஆண் பெண்களுக்கான எறி பந்து போட்டி

7.1. 2026 கொடுமுடி மேற்கு & கொடுமுடி தெற்கு ஒன்றியம் சார்பில் தாண்டாம்பளையத்தில் ஆண்களுகாண வாலிபால் போட்டி

8.1. 2026 வீரப்பன் சத்திரம் பகுதி சார்பில் வீரப்பன் சத்திரம் காவேரி ரோட்டில் ஆண்களுகாண கபடி போட்டி

8.1. 2026 ஈரோடு ஒன்றியம் சார்பில் காளிங்கராயன் பாளையம் லட்சுமி நகரில் ஆண்களுகாண கிரிக்கெட் போட்டி

9.1. 2026 மொடக்குறிச்சி மேற்கு ஒன்றியம் சார்பில் அரச்சலூரில் பெண்களுக்கான கால்பந்து போட்டி

9.1. 2026 மொடக்குறிச்சி தெற்கு ஒன்றியம் சார்பில் அரச்சலூரில் ஆண்களுக்கான கால்பந்து போட்டி

9.1. 2026 மொடக்குறிச்சி கிழக்கு & கொடுமுடி வடக்கு ஒன்றியம் சார்பில் மொடக்குறிச்சியில் பெண்களுக்கான கோ கோ போட்டி

9.1. 2026 சென்னிமலை வடக்கு ஒன்றியம் சார்பில் வெள்ளோட்டில் பெண்களுக்கான தடகளம் போட்டி

9.1. 2026 பெரியசேமூர் பகுதி சார்பில் மாணிக்கம் பாளையம், வீட்டு வசதி வாரியத்தில் ஆண், பெண்களுக்கான வாலிபால் போட்டி

9.1. 2026 கோட்டை பகுதி சார்பில் வில்லர சம்பட்டி ஸ்போர்ட்ஸ் வில்லேஜ்ஜில் ஆண், பெண்களுக்கான தட்டு எறிதல், ஈட்டி எறிதல் போட்டி

9.1. 2026 கருங்கல் பாளையம் பகுதி சார்பில் கருங்கல் பாளையம் மஹாஜனபள்ளியில் கால்பந்து போட்டி

9.1. 2026 பெரியநகர் பகுதி சார்பில் வில்லர சம்பட்டி ஸ்போர்ட்ஸ் வில்லேஜ்ஜில் ஆண், பெண்களுக்கான 100மீ/400மீ ஓட்டப்பந்தயம் போட்டி



எனவே இந்த நிகழ்ச்சி யில் அந்தந்த இடங்களுக்கு உட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளை கழகம் மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA2, BDA, BLC, கழகதோழர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சருமான சுமுததுசாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# பெரம்பலூர் மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர், ஜன. 6 -

பெரம்பலூர் மாவட்ட செயற்குழு கூட்டம் இன்று (06..01.2026 - செவ்வாய்க் கிழமை) நடைபெறுகிறது.

இது குறித்து பெரம்பலூர் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா. எம்.பி., வழிகாட்டுதல்படி, போக்குவரத்துத்துறை மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கிணங்க,

பெரம்பலூர் மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம், மாவட்ட அவைத் தலைவர் அ.நடராஜன் தலைமையில், கே.என். அருண்நேரு எம்.பி.,

சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், ஆகியோரது முன்னிலையில் , இன்று



(06.01.2026 -செவ்வாய்க் கிழமை)

காலை 10.00. மணிக்கு, பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் தங்க. சித்தார்த்தன், குன்னம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் ஏ.கே. அருண் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இதில் மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய,நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்!

ஜனவரி 14,15 தேதிகளில் நடைபெறும்

திராவிடப்பொங்தல் சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம் குறித்து,


ஜனவரி19, தஞ்சாவூர் செங்கிப்பட்டியில் நடைபெற உள்ள டெல்டா மகளிர் அணி மண்டல மாநாடு குறித்து மற்றும்

கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நெல்லை புகாரி
### சனவரி 6 (1999)



கழகத்தின் தொடக்க நாள் முதலாக அறிஞர் அண்ணா அவர்கள் வழிகாட்டுதலையேற்று, தி.மு.க.வின் கொள்கையில் உறுதி கொண்டு, தமிழ்நாட்டின் ஊர்கள்தோறும் கழக மேடைகளில் கொள்கை பரப்பும் முழக்கம் செய்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் அன்பைப் பெற்றவர்.

கழகத்தின் அறப்போராட்டங்கள் பலவற்றிலும் ஈடுபட்டு சிறை சென்றது மட்டுமின்றி, மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

“சிறுபான்மையினரான இசுலாமியர்கள் பெரும்பான்மையினருடன் இணக்கமாக வாழ்வதற்கான வழிகாண்பது தி.மு.கழகம்” என்பதில் உறுதி பூண்டு அயராது பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**